

கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு கழகத்துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார். அருகில் டி.ஆர்.பாலு எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.



கழகப் பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்திற்கு இந்து என்.ராம் அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார். அருகில் டி.ஆர்.பாலு எம்.பி, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மற்றும் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளனர்.

### சேலம் மாவட்டத்தில்

# தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய வீடுகள்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சேலம், ஆக.22-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டு வரும் குடியிருப்பு பணிகளை வருகின்ற நவம்பர் 2025-க்குள் விரைந்து முடித்து பொது மக்களுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்க உத்தரவு வழங்கி குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஆய்வு மேற்கொண்டபோது தகவல் தெரிவித்தனர்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் சேலம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் (20.08.2025) புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளியின் நிறுவனத்தினையும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பெரியார் நகர், அல்லிக்குட்டை, காந்திநகர், நேரு நகர் ஆகிய பகுதியில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

சேலம் மாவட்டம், கந்தம்பட்டி பகுதியில் புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.19.42 இலட்சம் கடனுதவி பெற்று ஃபிளக்ஸ் பிரிண்டிங் தொழில் செய்து அ.மனோகரன் நிறுவனத்தினை அமைச்சர் பெருமக்கள் ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.6.79 இலட்சம் மானியம் தொகை குறித்த காலத்தில் விடு விக்கப்பட் டுள்ளதா என்பது குறித்தும், மாத தவணை தொகையினை உரிய காலத்திற்குள் செலுத்தப்பட்டு வருகிறதா என்பது குறித்தும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆகியோர் கேட்டறிந்தார்கள்.

பின்னர் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் நலனுக்கென செயல்படுத்தப்பட்டுவரும் இத்தகைய திட்டங்கள் அனைத்தும் முறையாக உரிய கலத்தில் பயனாளிகளுக்கு சென்று சேரு வதை உறுதி செய்திடும் வகையில் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சிறு, குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 5 சுய வேலைவாய்ப்பு திட்டங்க ளின் கீழ் ரூ.2,057.90 கோடி மானியத்துடன் ரூ.5,301.63 கோடி வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டு, 63,014 புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ள னர்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டங்களின் கீழ் ரூ.317.48 கோடி மானியத்துடன் ரூ.587.34 கோடி வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டு, 3,619 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளனர். மேலும், கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் 3,180 கைவினை கலைஞர்களுக்கு ரூ.12.21 கோடி மானியத்துடன் ரூ.58.48 கோடி கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 5 சுய வேலை வாய்ப்பு திட்டங்கள் மூலம் புதிய தொழில் முனைவோர் மற்றும் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 166 பயனாளிகளுக்கு ரூ.35.40 கோடி மானியத்துடன் ரூ.97.96 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 359 பயனாளிகளுக்கு ரூ.6.69 கோடி மானியத்துடன் ரூ.22.35 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், பிரதம மந்திரி வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 1,345 பயனா ளிகளுக்கு ரூ.59.16 கோடி மானியத்துடன் ரூ.161.01 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 149 பயனாளிகளுக்கு ரூ.13.67 கோடி மானியத்துடன் ரூ.25.38 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், பிரதம மந்திரி மைக்ரோ ஃபுட் பிராசசிங் எண்டர்பிரைசஸ் திட்டத்தின் கீழ் 496 பயனாளிகளுக்கு ரூ.13.34 கோடி மானியத்துடன் ரூ.36.22 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளும், கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் 675 பயனாளிகளுக்கு ரூ.2.73 கோடி மானியத்துடன் ரூ.16.18 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகள் என மொத்தம் சேலம் மாவட்டத்தில் மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ் 3,190 பயனாளிகளுக்கு ரூ.131 கோடி மானியத்துடன் ரூ.359.10 கோடி வங்கிக்கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. அதே போன்று, கடந்த 4 ஆண்டுகளில் சேலம் மாவட்டத்தில் 10 வகையான மானியத்திட்டத்தின் கீழ் 552 தொழில் முனைவோர்களுக்கு ரூ.27.53 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் பெரியார் நகர் பகுதியில் ரூ.27.18 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 280 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதையும், அல்லிக்குட்டை நகர் பகுதியில் ரூ.49.25 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 504 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருவதையும்,

அதேபோன்று சேலம் பழைய பேருந்து நிலையம் அருகில் காந்தி நகர் பகுதியில் ரூ.27.19 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 280 அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டப்பட்டு வருவதையும், நேரு நகர் பகுதியில் ரூ.38.06 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதி களுடன் கூடிய 392 அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டப்பட்டு வருவதையும் அமைச்சர் பெருமக்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இத்திட்டப்பகுதிகளில், ஒவ்வொரு கட்டிட தொகுப்பும் தரைதளம் மற்றும் 6 தளங்களை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகும். ஒவ்வொரு குடியிருப்பும் தலா 400 சதுர அடி பரப்பில் ஒரு வரவேற்பறை, ஒரு படுக்கையறை, ஒரு சமையலறை, ஒரு குளியல் அறை மற்றும் கழிப்பறை கொண்டுள்ளது. ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் மின் வசதி, குடிநீர் குழாய் இணைப்பு வசதி மற்றும் கழிவுநீர் குழாய் இணைப்பு வசதி ஆகிய அடிப்படை தேவைகளுடன் இக்குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து திட்டப்பணிகளை விரைவாகவும், தரமாக முடித்து வருகின்ற நவம்பர் 2025-க்குள் பொது மக்களுக்கான வீடு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவர அமைச்சர் பெருமக்களால் தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின் போது, தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குனர் எல்.நிர்மல்ராஜ், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கண்காணிப்பு பொறியாளர் செந்தில் குமார், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை, சிங்காநல்லூர், குளத்தேரி அருகில் உள்ள நஞ்சப்பாநகர் இளைஞர் நற்பணி மன்றம், "திருவள்ளுவர் படிப்பகம்" சார்பில் பகுதி அவைத்தலைவர், திருவள்ளுவர் படிப்பகம் தலைவர் கே.பி.ராமகிருஷ்ணன் தலைமையில், இளைஞர் நற்பணி மன்றம் தலைவர் கே. பிரவீன்குமார் முன்னிலையில், சமூக சேவகர் எம்.கோபாலன் வரவேற்புரையில் நடைபெற்ற 79 வது சுதந்திர தின விழாவில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் கல்வி உதவித்தொகையினை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார். இதில் சிங்கை மு.சிவா, சிங்கை அன்பு, தென்னவர் செல்வம், முருகானந்தம், திராவிட மணி, ஆதி மகேஸ்வரி திராவிடமணி, சிங்கை பிரபாகரன், சிங்கை சௌந்தர், சிங்கை சம்பத், வி.லட்சுமணன் உள்பட கழக நிர்வாகிகள், இளைஞர் நற்பணி மன்றம் நிர்வாகிகள், திருவள்ளுவர் படிப்பகம் நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நக்கீரன் இதழில் பணிபுரிந்த

# பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் மறைவு! ரூ.10 இலட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 22 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நக்கீரன் இதழில் பணியாற்றிய ஆர்.டி. சக்திவேல் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பத்து இலட்ச ரூபாய் நிதி உதவியாக அவரது குடும்பத்தாருக்கு வழங்க உத்தரவிட்டுள்ளார்.**

நக்கீரன் இதழில் பணிபுரிந்த பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் திண்டுக்கல் மாவட்டம் விளாம்பட்டியைச் சேர்ந்தவர். எளிய குடும்பத்தில் பிறந்தவர் சக்திவேல் என்றாலும், இவருடைய உழைப்பும் எழுத்தாற்றலும் சக்திவாய்ந்தவை,

"நக்கீரன்" இதழில் ஆர்.டி.எ(க்)ஸ் எனும் பெயரில் கட்டுரைகள் எழுதி, பாராட்டப்பட்டுள்ள எழுத்தாளர் ஆர். டி.சக்திவேல் சினிக்கூத்து என்ற பெயரில் சினிமா செய்திகளை தொடர்ந்து எழுதிவந்துள்ளார். அரசியல் செய்திகள், இலக்கியப் படைப்புகள், கவிதைகள் என அவருடைய எழுத்து பல பரிமாணங்களைக் கொண்டது.

கடந்த 6 ஆண்டுகளாகவே உடல் நலம் குன்றியிருந்த பத்திரிகையாளர் ஆர்.டி.சக்திவேல் தொடர்ச்சியாக சிகிச்சை மேற்கொண்டும் பலனின்றி இயற்கை எய்தியுள்ளார் என்பதை அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

ஆர்.டி.சக்திவேல் அவர்களின் மறைவு பத்திரிகை உலகிற்கு மிகப் பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்துவாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த பத்திரிகையாளர் ஆர். டி.சக்திவேல் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### கரூர் மாவட்டம்

# நன்னியூர், கடம்பன்குறிச்சி ஊராட்சிகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வி.செந்தில்பாலாஜி வழங்கினார்!

கரூர், ஆக.22 -

நன்னியூர், கடம்பன்குறிச்சி ஊராட்சிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் மாவட்டம் மண்மங்கலம் வட்டம். நன்னியூர் மற்றும் புஞ்சை கடம்பன்குறிச்சி ஆகிய ஊராட்சிகளுக்கு துவரப்பாளையம் சமுதாயகூடத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில் வகித்தார். 10 பயனாளிகளுக்கு ரூ. 23.10 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு மக்களிடம் சிறந்த வரவேற்பை பெற்ற ஒரு உன்னதமான திட்டமாக "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் அமைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமானது 179 இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு 19.08.2025 வரை 66 முகாம்கள் நிறைவு பெற்றுள்ளது. இம்முகாம்கள் மூலம் இது வரை 53.564 மனுக்கள் வரப்பெற்றுள்ளன. இதில் 19.705 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஆகும். மனுக்களுக்கு சில நிமிடங்களில் அந்த முகாம்களிலேயே தீர்வு அளிக்கப்படுகிறது. ஒரு சில மனுக்களுக்கு ஒரு வார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து மனுக்களுக்கும் 45 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் ஆணைகளை வழங்கியுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 45 நாட்களுக்குள் அனைத்து மனுக்களுக்கும் தீர்வு காண நிர்வாகத்தின் சார்பாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன இவ்வாறு அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையின் சார்பாக 10 நபர்களுக்கு சாதிச் சான்று, வருமானச் சான்று இருப்பிடச் சான்று, விதவைச் சான்று மற்றும் பட்டா மாறுதல் உள்ளிட்ட சான்றிதழ்களையும், ஊரக வளர்ச்சித்துறையின் சர்பில் 3பேருக்கு சொத்துவரி பெயர் மாற்றத்திற்கான ஆணைகளையும், எரிசக்தி துறையின் சார்பாக இணைப்பு பெயர் மாற்றத்திற்கான ஆணை, கூட்டுறவுத் துறையின் சார்பாக 2 மகளிர் உதவிக் குழுவினருக்கு ரூ 23.10 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும் என மொத்தம் 16 நபர்களுக்கு ரூ.23.10 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்பாலாஜி வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு வீ. ரெ.வீரபத்திரன். உதவி இயக்குநர் ஊராட்சிகள் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) தேன்மொழி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் பிரகாசம். வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலட்சுமி மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.சொ. கணேசன்

### ஆகஸ்ட் 22 (2005)



பள்ளிப்பருவத்திலிருந்தே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, ஜெயங்கொண்டம் பகுதியிலே கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

1967ஆம் ஆண்டு உடையார்பாளையம் வட்டக் கழகச் செயலாளராகவும், ஒன்றிய சீரணித் தலைவராகவும், 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் கழகப் பணியாற்றியவர்.

1964ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

1986ஆம் ஆண்டு தா.பழூர் ஒன்றியப் பெருந்தலைவராகவும், 1989 மற்றும் 1996 ஆகிய இருமுறை ஜெயங் கொண்டம் சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராகவும், பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

"களம் பல கண்டவனே, சிறை பல சென்றவனே, உளம் கவர் உரையாற்றிப் பேரவையில் வென்றவனே, குளம் என எமது கண்கள் நீர்நிறைய, கணப் பொழுதில் மறைய; மனம், ஏன் வந்ததோ? எப்படித்தான் வந்ததோ–" என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**